# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-ருசு] யாழ்ப்பாணம்:- நந்தன ஹு கார்த்திகைமீ உசவ செவ்வாய்க்கிழமை (9 Dec. 1952) [இல - ருரு


## சென்னை நாட்டிலும் பெருஞ் சேதம்

### புயற் காற்றின் பொல்லாங்கு

### 134 பேர் இறந்தனர்

சென்ற ஞாயிற்றுக்கிழமை வீசிய புயற்காற்று சென்னை நாட்டிற் கிழக்குக் கரையோரமாகப் பெருஞ் சேதத்தை விளைவித்ததாக அறிகின்றோம். காரைக்காலிலே உயிர்ச்சேதம் அதிகமென்றும் ஏனையவிடங்களில் ஆடு மாடு முதலியன ஆயிரக்கணக்காக அழிந்துவிட்டன வென்றும் புகையிரத விமான தபாற் போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டதென்றுஞ் செய்திகள் கூறுகின்றன.

### சாராயதீங்கப் பகிரங்கத் தேர்தல்

ஊர்காவற்றுறை வாக்கெடுப்பு 7-1-53 புதன்கிழமையென 5-12-52 இந்துசாதன இதழிற் குறிக்கப்பட்டிருந்த நாள் 6—1—53 செவ்வாய்க்கிழமையாக மாற்றப்பட்டிருக்கிறதென மதுவிலக்குச் சபையார் அறியத் தருகின்றனர்.

### மற்றினிக்காண்பதென்னே!

திருச்சிற்றம்பலம்.

தெரித்தகணையாற்றிரிபுரமூன் றுஞ்செந்தீயின்மூழ்க
வெரித்தவிறைவனிமையவர்கோமானிணையடிகள்
தரித்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
சிரித்தருகங்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்ப
தென்னே.

திருச்சிற்றம்பலம்.

## சூறுவளி நட்ட நிவாரணம்

### 3 இலட்சம் ரூபா அரசாங்க உதவி

### பொதுசன நிதிகளும் பெருகுகின்றன

அமைச்சர்கள் ஆறுபேர் சனிக்கிழமை யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சுற்றிப் பார்த்து உத்தியோகத்தர்களுடன் கலந்தாலோசித்து நட்டநிவாரணத்திற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்திருக்கிறார்கள். சமூக சேவைப் பகுதி அதிகாரி இந்தச் சூறுவளியால் நட்டப்பட்டவர்களுக்குதவிக்காக ரூபா 300,000 ஒதுக்கியிருக்கின்றார்.

கடற்றொழில் மந்திரியார் திரு. G. G. பொன்னம்பலம் அவர்கள் தமது பகுதி நிதியிலிருந்து ரூபா 150,000 கடற்றொழிலாளரில் நட்டப்பட்டோருக்குதவிக்காக உபயோகிக்கத் தீர்மானித்துள்ளனர்.

(1) காரியாதிகாரிகள் நட்டமடைந்த ஒவ்வொருவருக்கும் ரூபா 10/= அல்லது ஒரு குடும்பத்துக்கு ரூபா 20/= கொடுக்கக்கூடியதாயும் (2) பங்கீட்டுணவுப்பொருள் தேவையானபடிக் குதவப்படவும், (3) அழிந்த வீடுகளைப் புதுப்பிக்கத் தனித்தனி ரூபா 300/= வரைக்கும் கடற்றொழிலாளருக்கும் பயிரிடுவோருக்கும் வழங்கக்கூடியதாகவும் (4) கடற்றொழிலாளர் பயிரிடுவோர் உபகரணங்கள் நட்ட கிவிர்த்திக்காகத் தனித்தனிரூபா 300 வரைக்கும் உதவி கொடுபடவும் (5) பயிரிடுவோருக்கு இலவசமாகத் தானிய வகைகள் கொடுபடவும் (6) பயிரிடுவோர் திருத்த வேலை செய்வதற்கு நிவாரண வேலைச் சம்பளத் திட்டப்படி வேதனம் கொடுபடவும் தீர்மானிக்கப்பட்டது.

Sir யோன் கொத்தலாவலை திரு. G. G. பொன்னம்பலம் Dr. C. M. கலீல், திரு. H, de. Z. சிறிவர்த்தன திரு. சு. நடேசன் அவர்களும் வட பகுதிப் பிரதிநிதிகளும் இந்த ஆலோசனைக் கூட்டத்திற் கலந்துகொண்டனர்.

# "நாவன்மை பெற்ற நற்றவையார்"

## சைவமுந் தமிழுந் தழைக்க வந்த செந்தமிழ்ப்பயிர்

செந்தமிழ்நாடு ஒவ்வோர் நூற்றாண்டிலும் தன் வளங் குன்றாது பாதுகாக்கும் வண்ணம் பல புலவர்களைப் பெற்றெடுக்கின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, ஆறுமுகநாவலர் என்னுஞ் சிறந்த புலவர்கள் தோற்றினார்கள். மீனாட்சிசுந்தரம் பிள்ளை தென்னாட்டிலுதித்து அந்நாட்டைச் சிறப்பித்தார். தமிழில் நிரம்பிய புலமை படைத்தவுடன் சைவசித்தாந்தத்திலும் மேம்பட்டு விளங்கினார். சைவ சமயத்துக்கும் தமிழுக்கும் தொண்டு செய்தார். மீனாட்சிசுந்தரம்பிள்ளை நாவலரவர்களுக்கு ஏழு வயது மூத்தவர். ஈண்டு நாவலரைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

போர்த்துக்கேயர் காலத்தில் பாதிரிமார் கிறீஸ்த சமயத்தைப் பரப்பி வந்தனர். தம் சமயத்தை வளர்ப்பதற்காக இலங்கையிலுள்ள சைவக் கோயில்களை யிடித்துத் தரைமட்டமாக்கினர். அவற்றின் கல் மரம்முதலியவற்றைக்கொண்டு தங்கள் மதக் கோயில்களைக் கட்டினர். பின் பலாத்காரமாக மதமாற்றம் தொடங்கினது. திருநீறு பூசுவதும் இலையிற் சாப்பிடுவதும் ஆகாதென்று தடுத்தனர். நம் சமயத்தவர் மறைத்தும் தம் சமயத்தை அநுட்டித்து வந்தனர். இலைபோட்டுச் சாப்பிட்டவுடன் கூரையிற் செருகி விட்டனர். போர்த்துக்கேயர் இம்மட்டுடன் நிற்கவில்லை. ஒவ்வொரு வீட்டாரையும் கொண்டுவா ஆடு, மாடு, கோழி என்று கிட்டி போட்டனர். ஞானப்பிரகாசர் முறை வந்தது. முதனாளிரவே இப்பாதகஞ் செய்வதிலும் இந்தியாவுக்கு ஓடித் தப்புவதே மேல் எனறு தனுக்கோடி வழியாக சிதம்பரம் போய்ச் சேர்ந்தார். தில்லை நடராசனைத் தமிழும் சைவமுந் தழைக்குமபடி

### திரு. சி. சீவரத்தினம

ஆசிரியர், நாவலர்கலாசாலை,

வேண்டினார். இவர் மரபினர் நல்ல கலவியறிஞர். சிறந்த செல்வாக்குடையர். இவர் பரம்பரையில் இலங்கை காவல முதலியார் என்பவர் ஒருவர் இருந்தார். சிறந்த தமிழ்ப் புலவர். வைத்தியமுந் தெரியும்; அரசாங்கத்தில் நல்ல மதிப்பு உண்டு. இவரது புதல்வர் பரமானந்தர். இவருமஅரசாங்க உத்தியோகம் பார்த்தவர். வைத்திய சாஸ்திரமுந் தெரியும். ஒல்லாந்த அரசனுக்கு வந்த கொடிய நோயைத் தீர்த்துப் பரிசும் பெற்றவர். இவருக்குக் கந்தர் இலங்கைநாயகர் என்ற இரு புதல்வர் இருந்தனர். கந்தர் ஒல்லாந்த அரசரிடம் ஆராச்சி வேலை பார்த்தவர். வைத்தியஞ் செய்வதிலும சமர்த்தர். சில வைத்திய நூல்களை வசனத்தில் எழுதியவர். தமிழில் மிக்க புலமையுடையவர். நாடகங்கள் இயற்றுவதிலும் பாடுவதிலும் வல்லுநர். சிவபக்தர், இவரது மனைவியார் பெயர் சிவகாமியம்மையார். இவர்களுடைய ஆறாவது பிள்ளையே நப் அருந்தவப் புதல்வர் ஸ்ரீ ஆறுமுகனார்.

இவர் ஆயிரத்து எண்ணூற் றிருபத்திரண்டாம் ஆண்டு சித்திரபானுவருடம் மார்கழித் திங்கள் ருஉம் உ (8-12-1822) புதன்கிழமை இரவு பத்து மணியளவில், தமிழுஞ் சைவமுந் தழைத்தோங்க தமிழகம் செய்த தவப்பயனாக வந்தவதரித்தார். இவர் உதித்திலரேல் தமிழுஞ் சைவமுங் குன்றி அழிந்துபோயிருக்கும். இவரது பெருமை புலவர் சி. வை, தாமோதரம் பிள்ளை அவர்கள இயற்றிய பாவினால் இனிதுணர்தற்பாற்று.

நல்லைநக ராறுமுக நாவலர்
பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கேசுருதியெங்கே
— எல்லவரும் [ங்கே
ஏத்துபு ராணாகமங்க ளெங்கே
ப்ரசங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை.

ஆறுமுகனார் மூன்று வயதிலேயே தெள்ளிய தமிழ் பேசத் தொடங்கினார். 'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்ற முதுமொழியின்படி இவரது திறமை இளமையிலேயே விளங்கிற்று. ஐந்தாம் பிராயத்தில் ஏடு தொடக்கப்பெற்று எழுத்தறிந்ததும் நல்லூரிலுள்ள சுப்பிரமணிய பிள்ளையிடம் கல்வி கற்க அனுப்பினர். அக்கால வழக்கப்படி வாக்குண்டாம், மூதுரை, நன்னெறி முதலிய நீதிநூல்களையும், நிகண்டு முதலிய கருவி நூல்களையும் மிக்க திறமையுடன கற்றார். அன்றியும் விளங்காதவற்றைத் தாமே விளக்கிக்காட்டி

([illegible])



## "மெய்த் தவ வேடமே மெய்ப் பொருள்" எனத் தொழுதார்

### மெய்ப் பொருள் நாயனார்

சேதி நாட்டிலே திருக்கோவலூரிலே அரசியல் அறநெறி வழுவாது இராச்சிய பரிபாலனஞ் செய்து, திருக்கோயில்களிலே நித்திய நைமித்திகங்கள் சிறப்புற நடக்கச் செய்து, சிவனடியார் திருவேடத்தைச் சிந்தையி லிருத்தி அவர்கள் திருவடிகளே உறுதுணையாகக்கண்டு தமது பெருஞ் செல்வம் அவர்களுக்கேயாகும என்றும் மனத்துடன் அவர்கள் வந்த பொழுது மிகுந்து வரும் மகிழ்வுடன் வேண்டிய திரவியம குறைவறக் கொடுத்து வாழ்ந்தார் மெய்ப் பொருணாயனார்.

"மங்கையைப் பாகமாக
உடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி
ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப்
போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள்நா யகருக் கன்பர்
தாளலால் சார்போ னில்லார்"

'தேடிய மாடு நீடு
செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்
காவன ஆகும் என்று
நாடிய மனத்தி னோடு
நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக்
குறைவறக் கொடுத்து வந்தார்"

இவ்வாறு நிகழுங் காலத்திலே முத்திநாதன் என்னும் ஒரு அரசன் இவரை வெல்ல விரும்பிப் போர் புரிந்து பன்முறைகளில் தன் படைகளை யிழந்தான். வெல்லும் வழி வேறின்மையால் இவருடைய அடியார் பத்தித்திறத்தை யறிந்த முத்திநாதன் வஞ்சனையால் வெல்லக் கருதி வெண்ணீறுசாத்தி வேணி முடித்த அடியார் வேடங்கொண்டு மறைத்த ஆயுதத்துடன திருக்கோவலூரையடைந்தான். அங்கே அரசமாளிகை வாயிலை யடைந்து காவலாளர் வணங்கி நிற்பப் பல வாயில்கள் கடந்து உள்ளே சென்றான். இராசா நித்திரை செய்கிறார் என்று இறுதி வாயிலிலே நின்ற தத்தன் என்னுங் காவலாளன் தடைசெய்ய, யான் அவருக்கு உறுதி நெறி கூறப்போகிறேன் தடை செய்யாதே என்று சொலலித் தேவியார் பக்கத்திலிருப்ப நாயனார் நித்திரை செய்யும் கட்டிலையணைந்தான். தேவியார்விரைந் தெழுந்து நாயனாரை எழுப்ப அவர் எழுந்து அவனைச் சிவனடியாரென நினைத்து வணங்கி மகி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ கார்த்திகைமீ ௨௪ உ செவ்வாய்க்கிழமை

## நட்டம் அடைந்தோருக்குதவி

அரசாங்க அமைச்சர்கள் யாழ்ப்பாண மக்களின் பரிதாப நிலைமையை நன்குணர்ந்து நட்டமடைந்தவர்களுக்கு ஆதரவு கொடுக்குமுகத்தால் 300,000 ரூபா உதவத் தீர்மானித்திருக்கிறார்கள் என்பது அவர்கள் ஊரவர்களின் இன்னல்களை யறிந்து அவ்வப்போது அவற்றை நீக்குவதிலே கருத்துடையவர்களாயிருக்கிறார்கள் என்ற உண்மையைக் காட்டுகிறது. சூறுவளியினாலேற்பட்ட நட்டம் சொல்லொணாத வகையிலுள்ளதென்பது உண்மையே. ஆனால் இந்தப் பொருளழிவுக்குப் போதியதாகப் பணவுதவி அரசாங்கங் கொடுக்க முடியாதென்பது சொல்லாமலே விளங்கும். எனவே பொதுசனங்களிற் பரோபகாரிகள் நிதிதிரட்டி உதவ வேண்டிய கடமை உண்டாகின்றது. இவ்வகையிலே கொழும்புமா நகரிற் பிரசுரமாகும் தினசரிப் பத்திரிகைகள் தினகரனும் வீரகேசரியும் நன்கு முயன்றிருக்கின்றன.

அரசாங்க உதவிப் பணமும் பொதுசன நிதியுமாகத் திரட்டப்படுந் தொகையைப் பங்கீடு செய்வதைப் பற்றிச் சிறந்த வழிவகைகள் எடுக்கப்படவேண்டியதே இப்பொழுது வேண்டற்பாலது.

பயிரழிவு, பொருள் நட்டம் என்பனவற்றையெல்லாம் உள்ளபடி தொகுத்துக் கணக்கெடுப்பதுவும், பின்னர் அவரவர்களுக்கேற்றபடி உதவிப் பணத்தைத் தீர்மானித்து வைப்பதுவும், அவ்வாறு குறிக்கப்பட்ட பணத்தை உரியவர்களுக்கு வழங்குவதும் இவற்றோடு சேர்ந்த இதர பல கருமங்களை ஆற்றுவதும் ஆகிய கடமை அரசாங்கப் பொறுப்பிலேயே இருப்பதிலும் பொதுசனங்களும் அரசாங்க உத்தியோகத்தர்களும் கலந்தாலோசித்துத் தெரிவு செய்யப்பெற்ற ஒரு குழுவினரில் விடப்படுவது எவ்வகையாலும் நன்மை பயப்பதன்றித் தீமையைத் தவிர்ப்பதாகவுமிருக்கும்.

புயற்காற்றினாலுண்டாய பெருவிபத்தை நேரிற்கண்டு காலந் தாழ்த்தாது இப்பத்திரிகை வாயிலாக அரசாங்க உதவியும் பொதுசன உபகாரமும் வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளோம். அப்பொழுது பயிரழிவுக்குப் பரிகாரம் உரிய முறையில் நடைபெறவேண்டும் என்றுகாட்டிப் பொதுசன முன்னேற்றச் சங்கங்களின் உதவியை அரசாங்கம் பெறுதல் அத்தியாவசியம் என்று எடுத்துரைத்தோம். அவ்வழியே அமைச்சர்களும் உத்தியோகத்தர்களும் யாழ்ப்பாணப் பொதுமக்கள் சங்கங்களின் பிரதிநிதிகளையும் கிராமச்சங்க, பட்டினசங்க, நகரசங்க அங்கத்தவர்களையும் வேறு தொண்டர்களையும் ஒருங்கு கூட்டி நட்ட நிவாரணக் குழுவொன்றை நிறுவுதல் மிகமிக முக்கியமானது. அவ்வாறு நிறுவப்பெறும் குழுவினர் இப்பெரும் பணியைக் கடவுட் கருமமாக ஆற்றுதல்வேண்டும்.

=O=

## ஆ.தி.பா.வி.சங்கத்தலைவர் மந்திரியா? அதிகாரியா?

அரசாங்கத்தாரால் அங்கீகாரம் பெற்றச் சட்டப்படியமைக்கப்பெற்ற சங்கம் என்ற முறையில், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கத்தின் தலைவர் கல்விப் பகுதி அதிகாரியாகவேயிருக்க வேண்டும் என்ற விதி உண்டு. இது இலங்கை சுதந்திரமடைய முன்னர் ஆக்கப்பெற்றது. இப்பொழுது மக்கள் ஆட்சிமுறை பெற்றுவிட்டும் இச்சங்கத்தின் தலைவர் கல்விப் பகுதி யதிகாரியாக விருத்தல் பொருத்தாது. கல்விப்பகுதிக்குத் தலைமை வகிப்பவர் அந்த அமைச்சரே. பொதுசனங்களாற் றெரிவ செய்யப்பெற்றுப் பெரும் பாலாரின் கட்சியைச் சேர்ந்தவராகையால் கல்விப் பகுதி அமைச்சர் மொழி விருத்திச் சங்கங்களுக்குத் தலைமை தாங்கக்கூடிய உரிமையை மக்களிடமிருந்து பெற்றவராவர்.

இப்பொழுதிருக்கும் நிலைமையில் ஆரியமும் திராவிடமும் சற்றேனும் மதியாதார் ஒருவர் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கத் தலைவராக விருப்பது இச்சங்க நோக்கங்களுக்கே முரணாகின்றது. எனவே மொழிவிருத்திக்காகத் தொண்டாற்றும் இச்சங்க அங்கத்தவர்களும் ஏனைய தமிழபிமானிகளும் கல்விப்பகுதி அமைச்சர் தலைவராகக் கூடியவாறு விதிகளைத் திருத்தியமைக்க முயற்சி செய்வார்களாக.

## சாவகச்சேரிச் சாராயக்கடை நீக்கம்

பிரசாரக்கூட்டங்கள் இம்மாதம் 10-ந் திகதி புதன்கிழமை மாலை மாலை 6 மணிக்கு 3 ம் வட்டாரம் முருகமூர்த்தி கோவிலிலும் 5 ம் வட்டாரம் புத்த மடத்திலும் நடைபெறும்.

Dr. C. துருசாமி திரு. க. நவரத்தினம், வித்துவான் பொன் அ கனகசபை, திருவாளர்கள். S. நல்லையா, அ. அருளம்பலம், R T. சுப்பிரமணியம் ஆகியோர் பேசுவார்கள்.

## இரண்டாம் சர்வகலாசாலை

வெளிமாணவர் கல்வி பயிலுதற்கு மற்றொரு சர்வகலாசாலையமைத்தல் இன்றியமையாததென சேர் ஐவர் ஜெனிங்ஸ் அவர்கள் எழுதியபடி இரண்டாம் சர்வகலாசாலை அமைத்தற்கு வேண்டிய பணத் தேவையைப்பற்றி அரசாங்கம் ஆராய்கின்றதென தெரியவருகின்றது.

# சைவப் பிரசங்க முறை கண்ட நாவலர்!

ஐந்தாஞ் சமயகுரவரெனச் சைவமக்களாற் போற்றப்படும் ஆறுமுக நாவலர் அவர்களுடைய குருபூசைத் தினம் கிழும் கார்த்திகை மாசம் இருபத்துமூன்றாந் திகதி (8-12 52) நடைபெற்றது.

தமிழுஞ் சைவமும் ஓங்கி வளரும் நாள் வந்தணைந்தமையால் யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தோன்றினர்.

இவர் சுப்பிரமணியமென்பவரிடத்து மூதுரை முதலிய நீதிநூல்களையும், நிகண்டு முதலிய கருவி நூல்களுங் கற்றுவரும் நாளில், ஒன்பதாம் வயசில் இவருடைய தந்தையார் ஒரு நாடகம் பாடிக் கொண்டிருந்தபொழுதே சடுதியிற் சிவபதமடைந்தார். அந்த நாடகக் குறையை அப்போதே எம் அண்ணல் பாடிமுடித்தார். அதனைக் கண்ட இவருடைய தமையன்மார் இவரைச் சரவணமுத்துப் புலவர், இருபாலைச் சேனாதிராயமுதலியார் முதலிய வித்துவ சிரோமணிகளிடத்தில் கல்வி கற்கவைத்தார்கள், பின், இவர் பீற்றர் பார்சிவல் என்னுங் கிறிஸ்தவ பாதிரியாருடைய பள்ளிக்கூடத்தில் ஆங்கிலங் கற்று மேல்வகுப்புக்கு வந்தவுடன் பார்சிவல் இவரைக் கீழ்வகுப்புக்கு ஆங்கிலம் படிப்பிக்கவும் மேல் வகுப்புகளுக்குத் தமிழ் படிப்பிக்கவும் வைத்தார். இவரது பத்தொன்பதாவது வயசில் கிறிஸ்தவ வேதமாகிய பைபிளை மொழிபெயர்ப்பதற்குத் தமிழ்ப் பண்டிதராக இவரைப் பாதிரியாரமைத்தார். இவர் பைபிளை மொழிபெயர்க்குங் காலத்தில் அது சென்னை பட்டணத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு வந்தது. இவ்விரு மொழிபெயர்ப்புகளிலும் நாவலருடைய மொழிபெயர்ப்பே மிகச் சிறந்ததென்று கிறிஸ்தவ சபையாரால் ஏற்றுக் கொள்ளப்பெற்று அஃதே தமிழ் நாடெங்கும்வழங்கிவந்தது. பைபிளை மொழிபெயர்த்தமையால் நாவலர் கிறிஸ்து சமயத்தை முற்றாக அறிந்துகொண்டார். அப்போது கிறிஸ்து மதம் பரவிச் சைவமதங் குன்றுதலைக் கண்டு சைவசமய சாத்திரங்களையும் தேவார திருவாசகங்களையும் நன்கு கற்று சமஸ்கிருதத்திலும் பாண்டித்தியம் பெற்றுச் சிவாகமங்களையுங் கற்றுத் தெளிந்தார்.

சைவசமயத்தை வளர்க்கவேண்டுமென்னும் வேணவாவினால் உந்தப்பெற்றுச் சிலபிள்ளைகளை இரவிலும் காலையிலும், கைம்மாறுவேண்டாது, கற்பிக்கத் தொடங்கினர். திருவாவடுதுறை யாதீனத்தி விருந்து பண்ணில் வல்ல ஓதுவார்களை வருவித்து யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்களிலே தேவார திருவாசகங்களை ஓதுவித்தும் பண்ணோடு ஓதும்படி பிள்ளைகளைப் பயிற்றுவித்தும் பண்முறையைப் பரவச் செய்தார்.

இவருடையகாலத்தில் வேம்படி சுண்டிக்குழி, நல்லூர், கோப்பாய், புத்தூர், வட்டுக்கோட்டை, மானிப்பாய், உடுவில், தெல்லிப்பழை முதலியவிடங்களில் ஒன்பது முகவியமான தாபனங்கள் புதுநெறிக் கிறீஸ்தவ (PROTESTANT) பாதிரிமாருக்கிருந்தன. அவற்றைக் கருவியாகக் கொண்டு சைவமக்களுள் வறியவர்களையுங் கல்வியறிவில்லாதவர்களையும் மதம் மாற்றிய பாதிரிமாரின் துர்ச்செய்கைகளைக் கண்டித்தெழுதப்பெற்ற "ஞானக்கும்மி"யை அச்சிட்டு வெளியிட்டார். கிறிஸ்தவ பாதிரிமார் தங்கள் சமயத்தைப் போதிப்பதிலும் சைவ சமயத்தை இகழ்வதிலேயே அதிக கருத்துடையவர்களாயிருந்தனர். இவற்றுக்குப் பரிகாரமாகச் "சைவதூஷணபரிகாரம்" என்னும் நூலையும், சுப்பிரபோதம், விவிலிய குற்சிதம் முதலிய பிரசுரங்களையும் வெளியிட்டார்.

சைவசமயத்தவர்களுடைய நடத்தைகளைக் கண்டு மிக வருந்தித் தம்முடைய எண்ணங்களையெல்லாம் சைவமக்களுக்கு அறிவிக்கவும், சைவசமய அறிவொழுக்கங்களைப் பரப்பி வளர்க்கவும் துணிந்து வெள்ளிக்கிழமைகளிலே முன் என்றுமில்லாத முறையிலே சைவப் பிரசங்கங்கள் செய்யத் தொடங்கினார். இப்பிரசங்கங்களின் பயன் நனிமிக வளர்ந்தது. சமய அறிவையும் நல்லொழுக்கங்களையும் சைவ மக்கள் மேற்கொண்டனர். பரந்துவிளங்கும் நாவலரது புகழையறிந்த திருவாவடுதுறை மகாசந்நிதானமவர்கள் அவரைத் தம் மடத்துக் கழைத்து அவருடைய பிரசங்கங்களைக் கேட்டு மிகமகிழ்ந்து 'நாவலர்' என்னும் பட்டத்தை நல்கினார்கள். எம் நாவலர்பெருந்தகை வண்ணார்பண்ணையிலும் கோப்பாயிலும் சிதம்பரத்திலும் சைவ வித்தியாசாலைகளைத் தாபித்தார். கொழும்புத்துறை, கந்தர்மடம், பருத்தித்துறை, மாதகல், இணுவில் முதலிய இடங்களிலே ஏனையோரை எழுப்

செல்வச்சந்நிதி, ஆனந்தாச்சிரமம்;
**திரு. ச. முருகேசு அவர்கள் எழுதியது.**

பிச் சைவக் கல்வி நிலையங்களை ஆக்குவித்தார். வித்தியானுபாலன யந்திரசாலை என்னும் அச்சகமொன்றை வண்ணார்பண்ணையிலமைத்துச் சைவவித்தைப் பரவச் செய்தார். சைவத் தொண்டிற் சிந்தை பதிந்த இவரை விவாகஞ் செய்யுமாறு தமையன்மார் வற்புறுத்தினர். சைவமும் தமிழும் வளர்ப்பதே தமக்குப் பெரும்பேறாகக் கொண்ட நாவலர்பெருமான் அவர்கள் விருப்பிற் குடன்படாது நைட்டிகப் பிரமசரிய விரதத்தை மேற்கொண்டு சைவ ஒளிபரப்பும் சைவபானுவாய் விளங்கினர்.

அன்னார் எழுதிய பாலபாடம் பெரியபுராண வசனம் முதலியன தமிழ் வசனநடைக்கு முன்மாதிரியாய்த் திகழ்கின்றன. நாவலர் அவர்கள் அச்சுவாகனமேற்றி வெளிப்படுத்திய பழைய நூல்களும் புதிய நூல்களும் பலப்பல.

இப்பெருந்தகையார் வண்ணார் பண்ணையிலே தாம் வாழ்ந்த வீட்டிலே பிரமாதி ஹூ கார்த்திகைமீ 21 உ இரவு சிவபதமடைந்தார்,

"ஆரூரனில்லைப் புகலியர்கோனில்லை யப்பனில்லை
சீரூரு மாணிக்க வாசகனில்லைத் திசை யளந்த
பேரூரு மாறுமுக நாவல னில்லைப் பின்னிங்கி யார்?
நீரூருஞ் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே"

என்று கண்ணீர் விட்டுக்கொண்டு நாம் வாளாவிருக்கலாமா? நாவலரவர்களெழுதிய நூல்கள் கடிதங்கள் பிரகடனங்களின் மூலம் அன்னார் வகுத்த சைவப் பணித் திட்டங்களை உணர்ந்து அந் நெறியில் நாம் சைவத் தொண்டு செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலனசபையார் ஈழத் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் சைவமக்களைச் சைவபரிபாலன சபை அங்கத்தினராக்கி, வேண்டிய இடங்களில் சைவக் கல்வி நிலையங்களை நிறுவிச் சைவ அறிவொழுக்கங்களுடையோரை ஆசிரியர்களாயமைத்து, சைவ நூல்களைக் கற்பித்து, சைவ மாணவர் யாவரும் சமயதீக்கை பெற்றுச் சைவநெறியில் விரும்பிஒழுகுமாறு சிறந்த தொண்டாற்ற வேண்டும். சிவபெருமானையும் சிவனடியாரையும் போற்றி வாழும் பழக்கம் பரவச் செய்யவேண்டும், இவையெல்லாம் நாவலர்பெருமானுடைய மனத்திலெழுந்த நன்முயற்சிகளாகவின் சைவபரிபாலனசபை மாத்திரமன்றி, அவர் வழியொழுகித் தொண்டாற்ற முன் வந்த சைவ வித்தியாவிருத்திச் சங்கம் முதலிய சைவச் சபைகளெல்லாம் அறிவுச் சுடரைக் கொழுத்தி அன்புத் தளையாற் பிணைந்து ஒரே வழியில் ஒரே மனத்துடன் உத்தம தொண்டாற்ற வேண்டும்.

சைவப் பெரியோர்களே!
சைவச் சகோதர சகோதரிகளே!! இவை எல்லாம் ஆண்டு தோறும் அவமே அரற்றும் மொழிகளாய்க் கழிய விடாது அருள் வழி நின்று அருந் தொண்டாற்ற இன்னே உறுதி கொள்வோமாக.

## திருமணம்

நடராஜகுமார் — ஜேயமணி

மாதகல் திரு. முருகேசர் நடராஜகுமார் (பண்டத்தரிப்பு விலைபொருள் விற்பனைச் சங்க நிர்வாகக் காரியதரிசி) அவர்களுக்கும் கந்தரோடை திருமதி குமாரவேற்பிள்ளை ஜெயமணி அவர்களுக்கும் வெள்ளிக்கிழமை 28 - 11 - 52 காலை 6 மணிக்குச் சைவ முறைப்படி திருமணவினை நிறைவுற்றது. மண மக்கள் இன்புற்று வாழ்வார்களாக.

## 5-ம் தரப் பரீட்சை

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கமும் வடமாகாண ஆங்கில ஆசிரியர் சங்கமும் சேர்ந்து 6-12-52 சனிக்கிழமையன்று ஐந்தாம் வகுப்புப் பரீக்ஷையை ஒழுங்காக நடாத்தி முடித்தன. அரசாங்கப் பரீட்சைகளிலே அநேக குழப்பங்கள் நிகழுமிக் காலங்களில் ஒழுங்கான முறையில் பரீட்சையை நடாத்தி முடித்தமை வியக்கத்தக்க காரியமாகும். 160க்கு மேற்பட்ட பரீட்சை நிலையங்களில் 6500 மாணவருக்கு மேற்பட்ட தொகையினர் பங்குபற்றினர். முன்னைய ஆண்டுகளிலும் பார்க்க இவ்வாண்டில் பெருந் தொகையான பாடசாலைகளும் மாணவரும் பங்குபற்றியமை சங்கப் பொறுப்பில் நடைபெறும் பரீக்ஷைகளின் நம்பிக்கையை மேன்மேலும் உயர்த்திக் காட்டுவதாக இருக்கின்றது.

இவ்வாண்டுப் பரீக்ஷை எண், பாஷை, விவேகம், பொது அறிவு ஆங்கிலம் என்னும் ஐந்து பாடங்களில் நடைபெற்றது. பொது அறிவு, சரித்திரம், சுகாதாரம், பூமிசாஸ்திரம மூன்று பாடங்களையும் கொண்டதாக இருந்தது.

வடபகுதியில் அகோரமான மழை வருஷித்துக்கொண்டிருந்தபோதிலும் பரீக்ஷை ஏற்பாடுகளில் எவ்விதமான மாற்றமுமின்றி ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடந்தமை வடபகுதி சுவபாஷா ஆங்கில பாஷா பாடசாலை ஆசிரியர்களின் ஊக்கத்தையும் தளரா முயற்சியையும் தொழிலுணர்ச்சியையும் நன்கு பிரதிபலித்துக் காட்டுகின்றது. இப்பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தைமாத முதற்பகுதிக்குள் புதினப் பத்திரிகைகள் வாயிலாக வெளிவரும். ஆங்கில ஆசிரிய சங்கத்திற்கு திரு J.T. செல்லையா அவர்களும் தமிழாசிரியர் சங்கத்துக்கு பண்டிதர் திரு. S பொன்னுத்துரை அவர்களும் இப் பரீக்ஷைப் பொறுப்பாளர்களாக இருந்து திறமையுடன் நடாத்தி முடித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா. ஆ. தி. பா. வி. சங்க அறிக்கை

( சென்ற வாரம் நடந்த பொதுக் கூட்டத்தில் காரியதரிசி திரு. அ. சரவணமுத்து அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் ஒரு பகுதி)

## விசேட பொதுக்கூட்டம்

சங்கத்தில் கடந்த பல ஆண்டுகளாக உபதலைவராயிருந்தவரும், பரமேஸ்வரக் கல்லூரி அதிபரும், ஊவதாரையும் வாழவைக்கும் குணக்குன்றமான திரு. சு. நடேசன், B. A B. L, F.R G S, அவர்கள், இலங்கையின் இரண்டாவது பாராளுமன்றத்துக்கு, நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டுக் காங்கேசன் துறைத் தொகுதியின் பிரதிநிதியான மகிழ்வாலும், அதனிலும் மேலாக, அவர் தபால்-செய்திப் பகுதி மந்திரியாராக நியமனம்பெற்ற மகிழ்வாலும் உந்தப்பட்ட சங்கம் தனது நன்றியறிதலையும், பாராட்டுதலையும் வெளிப்படுத்துவதற்காக 27-7-52 இல் ஒரு விசேட பொதுக் கூட்டம் கூட்டியது. அக்கூட்டத்தில் அவருக்குப் பாராட்டுப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது; அன்பர்கள் பலர் அவருடைய சேவைகளைப் பாராட்டிப் பேசினார்கள்.

## பரீட்சைகள்

வழக்கம் போலச் சங்கப் பரீட்சைகள் செப்டம்பர்மாதம் 25, 26, 27 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டன. இவ்வாண்டு சங்கம் நடத்திய பரீட்சைகளின் சார்பில் விசேடமாகக் குறிப்பிடவேண்டிய விஷயங்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று பரீட்சைகள் புதிய பாடத்திட்டத்தின்படி நடத்தப்பட்டனவென்பது. பரீட்சைகளைப் பற்றி அரசாங்கத்தார் கூறிய ஒரு குறை, இப்பரீட்சைகளில் இலக்கணம், இலக்கியம், கட்டுரை முதலியன தவிர்ந்த பாடங்களுக்கு இடமில்லை என்பது. அக்குறை புதிய பாடத்திட்டத்திலிருந்து போதிய அளவுக்கு நீக்கப்பட்டுள்ளது. விசேடமாகக் குறிப்பிடவேண்டிய மற்றொரு விஷயம் கடந்த பல ஆண்டுகளிலும் பார்க்க மிகப் பெரும்பாலான தொகையினர் பரீட்சைக்குத் தோற்றியமை. இம்மிகுதிப்பாட்டுக்குக் காரணம் கோப்பாய் மகளிர் அரசினர் ஆசிரிய கலாசாலையும், பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலையும் ஆசிரியப் பயிற்சி பெறுபவர்களைப் பிரவேச பரீட்சைக்கு மிகுதியாக அனுப்பியமையாகும். பிரவேச வகுப்பைத் தங்கள் கலாசாலைகளில் நடத்த ஏற்பாடுகள் செய்த கலாசாலைகளின் அதிபர்களுக்கும், வகுப்புகளை நடத்திப் பெரும்பாலான மாணவர்கள் சித்தி பெறுவதற்கு ஏதுவாயிருந்த திருவாளர்கள் பண்டித க. இராசையா, பண்டித பொ. கிருஷ்ணபிள்ளை என்பவர்களுக்கும் சங்கம் தனது பாராட்டுதலை அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளது. இன்னும் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையும், புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியும் மாணவர்களை அனுப்பியமையையும் ஈண்டுக் குறிப்பிட விரும்புகின்றோம். எதிர்காலத்தில் எல்லா ஆசிரிய கலாசாலைகளும் சங்கப் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தோற்றுவிப்பார்கள் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாண்டுப பரீட்சைகள் சார்பான புள்ளிவிபரங்கள் வருமாறு:-

## பரிசில்கள்

இவ்வாண்டு சங்கம் நடத்திய பரீட்சைகளில் பின்வரும் மூன்று பரிசில்கள் பெறுவதற்குமட்டும் பரீட்சார்த்திகள் திறமை காட்டினார்கள்.

பண்டிதபரீட்சை: முகாந்திரம் தி. சதாசிவையர் ஞாபகார்த்தப் பரிசு திரு. ம. முருகேசு

பாலபண்டித பரீட்சை: திரு. பொ. கைலாசபதி B. Sc திருநெல்வேலி, சைவாசிரிய கலாசாலை உப அதிபர், அவர்களால் வழங்கப்படும் தருக்கபாடப் பரிசில்.

ஸ்ரீமதி து. ஐயாத்தைப்பிள்ளை

(இ) பிரவேச பரீட்சை வழக்கறிஞர் திரு வே. மாணிக்கவாசகர் J. P U. M. அவர்களால் வழங்கப்படும். இலக்கணப்பாடப் பரிசில்.

திரு மு. சின்னையா

காலத்துக்குக்காலம் மனமுவந்து பரிசில்கள் உதவிச் சங்கத்தை ஆதரிக்கும் இப்பெருமக்கள் யாவருக்கும் சங்கம் தனது கடப்பாட்டைத் தெரிவிக்கின்றது.

3. வகுப்புக்கள்:—

(அ) வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சங்கச் சார்பில் நடந்து வந்துள்ள பாலபண்டித பண்டித வகுப்புக்கள் இவ்வாண்டிலும்நடைபெற்றன. இவ் வகுப்பின் பிரதமாசிரியராயிருப்பவர் வித்துவான். ந. சுப்பையபிள்ளை அவர்கள்.

(ஆ) சுன்னாகம் பிராசீன பாடசாலை நிலையத்தில் இவ்வாண்டு ஓர் வகுப்பு நடத்தப்பட்டது. இவ்வகுப்பை நடத்தியுதவியவர்களுடைய பணியைச் சங்கம் பாராட்டுகின்றது.

| பரீட்சைக்கு | | பண்டிதம் | பாலபண்டிதம் | பிரவேசம் |
|---|---|---|---|---|
| | விண்ணப்பித்தவர்கள் | 27 | 26 | 141 |
| ,, | தோற்றியவர்கள் | 16 | 13 | 126 |
| ,, | சித்தி பெற்றவர்கள் | 4 | 3 | 96 |
| ,, | ஞான சித்திபெற்றவர்கள் | – | – | 7 |

# நாவன்மை பெற்ற நற்றகையார்

( முதலாம்பக்கத் தொடர்ச்சி )

மற்றைய மாணவர்களைக் கல்வியில் முன்னேற்றினர்.

தந்தையார் நாடகம் பாடுமிடங்களுக்கும் அவர் செல்வதுண்டு. ஒருநாள் ஆனித் திருமஞ்சன தினத்திலன்று நாடகம்பாடிக்கொண்டிருக்கும் தருணத்தில் தந்தையார் சடுதியிற் சிவபதமடைந்தார். அந்நாடகத்தின் குறையை ஆறுமுகனார் இனிது பாடி முடித்தார். இஃது தமையன்மாருக்கு மிக்க பிரீதியுண்டாக்கியபடியால் சேனாதிராயர், சரவணமுத்துப் புலவர் முதலியோர்களிடம் அனுப்பினர். அவர்கள் சொல்லிக்கொடுக்கும் ஒரு நன்னூற் சூத்திரமும், இரு காரிகைப் பாட்டும இவருக்கு ஒருபடி அன்னம் புசிக்கத் தகக ஒருவனுக்கு ஒருபிடி அன்னம எப்படிப் பசியை நீக்காதோ அதே போன்று அவர்கள் போதித்த கல்வி போதியதாகக் காணப்படவில்லை. மற்றையவர்களிடத்திற் கற்றதிலும் பார்க்கத் தாமாகக் கற்றவை அதிகம். ஒருவர் ஒருசெய்யுளைச் சொன்னால் அதிலுள்ள பஞ்ச இலக்கணப் பிழைகளையும உடனே கூறுவார். இப்படி இவர் தமிழில் மிக்க திறமையடைந்தவுடன், பாதிரியார் பாடசாலையில் ஆங்கிலங் கற்க அனுப்பினர். இவர் தமிழை ஆங்கிலத்திலும், ஆங்கிலத்தைத தமிழிலும் மொழி பெயர்ப்பதில் மிக்க திறமை யுடையவராகக் காணப்பட்டார். இவரது திறமையைக் கண்ட பாதிரியார் தம் பாடசாலையிலேயே மேல்வகுப்புகட்குத் தமிழும் கீழ்வகுப்புகட்கு ஆங்கிலமும் கற்பிக்கும்படி நியமித்தார். கற்பிக்குங் காலத்தில் பைபிளை மொழி பெயர்க்க இவரது துணையை நாடினர். மொழிபெயர்த்தனர். அக்காலத்தில் சென்னையிலும் கிறீஸ்தவ சங்கத்தினால் பைபிள் மொழி பெயர்க்கப்பட்டது. இவர்கள் மொழிபெயர்த்து முடித்ததும் சென்னைக்குக் கொண்டுசென்றபோது பாதிரியார் ஆறுமுகனாரையுங் கூட்டிச் சென்றார். சென்னையி லுள்ளார் தங்கள் மொழிபெயர்ப்பே சிறந்ததென வாதாடினர். இதனை முடிபு செய்ய ஒரு மத்தியஸ்தரை நியமிக்க அவர் யாழ்ப்பாண மொழிபெயர்ப்பே சிறந்ததென்றார், இப்படியான தமிழ் யாழ்ப்பாணத்திலுண்டா என்றும் வியந்தனர். என்னே நம் ஆறுமுகனாரின் பெருமை!

பைபிளை மொழி பெயர்க்குங் காலத்தில் கிறீஸ்த சமயத்தைப்பற்றி அறியவும சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர்கள் எப்படித் தம் சமயத்தைப் பரப்புகின்றனர் என்பதையும் சைவ சமயத்தை எப்படித் தூற்றுகிறார்கள் என்பனவற்றையும் உணர்ந்தார். சைவ சமயத்தின் பெருமைகளை யெல்லாம் அள்ளி வீசினார். வெள்ளிதோறும் அரிய பிரசங்கங்களை வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலில் நடாத்தினார். பிரசங்க முறையை முதலில் ஆரம்பித்த பெருமை நம் ஆறுமுகனார்க்கே யுரியது. இதனால் அனேகர் மீண்டும் சைவத்தைத் தழுவினர். சைவசமயக் கல்விக்கு இன்றியமையாத சம்ஸ்கிருதமுங் கற்று அதிலும் தேர்ச்சியடைந்தார். அக் காலத்திற பரசமயம் பரவுதலையும் தம் சமயமாகிய சைவங் குன்றுதலையுங் கண்டு ஊர்கடோறும் சைவப் பாடசாலைகளை நிறுவி சமயக் கல்வியைப் பரப்ப எண்ணி முதன்முதலாக வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தாபித்தார். அது இன்றும் சைவ நன்மக்கள் சார்பாக மிளிர்கின்றது. அன்றியும் சிதம்பரத்திலும் ஒரு வித்தியாசாலையைத் தாபித்தார். அது இன்றும் நடைபெற்று விளங்குகின்றது.

தம்முடைய பதிப்பு நூல்களை அச்சிடுவிக்கவும், பதிப்பி[illegible] யாழ்ப்பாணத்திலும் சென்னையிலும் ஒவ்வொரு அச்சியந்திரசாலையை நிறுவினர். சைவ வினாவிடை, பாலபாடம், இலக்கணச் சுருக்கம், நித்திய கருமவிதி, சைவசமய நெறியுரை முதலிய நூல்களைத் தாமே எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார். இன்னும் ஏட்டு வடிவத்திலேயுள்ள தமிழ் நூல்களை வசனநடையில் ஆக்கினார். இவர் வகுதிலரேல் இன்று நாம் புத்தக ரூபத்தில் காணும் நூல்கள் காண்பதரிது.

இவரது சைவ சித்தாந்த அறிவையும், பேச்சு வன்மையையுமறிந்த திருவாவடுதுறை ஆதீனத்தார் இவரை அழைப்பித்துப் பல பிரசங்கங்களைச் செய்வித்தார்கள். இவரது சிறந்த பேச்சைக் கேட்டோர் வியந்து பேசினர். இவரது திறமையை அறிந்த திருவாவடுதுறை ஆதீனத்தார் 'நாவலர் என்ற பட்டத்தை நன்கு அளித்தனர். அன்று தொடக்கம இன்று வரையில் நாவலர் என்றவுடன் நம் ஆறுமுகனாரையே குறிப்பதாயிற்று. நாவலர் வாழ்நாள முழுவதும் தமிழுக்கும் சைவத்துக்குமாக உழைத்தார். விவாகம் செய்தால் தம்பணிக்கு இடையூறெண்றெண்ணி கடைசிவரை பிரம்மச்சரிய விரதத்தை அநுட்டித்தார். தமது 56-வது வயதில் சிவபதமடைந்தார்.

சைவ நன்மக்களே! இவர் காட்டிய பாதையிற் சென்று நற்கதியடைய ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். சைவத்தைப் பரப்ப ஆவன செய்யும் வண்ணம் வேண்டுகின்றேன்.

# அணிந்துரை அரங்கம்

## அணுவில் தாண்டவம்

விஞ்ஞான சாத்திரங்கள் தமிழ் மொழியிலே வரவேண்டுமென்னும் விழைவு விரிந்து பரவும் இக்காலத்திலே அணுவில் காண்டவம் என்னும் இவ் வெளியீடு பௌதிகத் துறையிலுள்ள அரிய அறிவுரைகளைத் தந்து தமிழ் மக்களின் விழைவைப் பூர்த்தி செய்ய முன்வந்திருப்பது பெரிதும் போற்றுதற்குரியதாகும்.

இரு துறைகளிற் காணக் கிடக்கும் சில குறைகளை நிறைவு செய்யுமேயாயின் இது உலகில் ஈடில்லாத் தமிழ் விஞ்ஞான நூலாய் என்றும் விளங்கும்! அவற்றுள் ஒன்று ஆங்கில விஞ்ஞான பதங்களுக்குத் தகுந்த தமிழ் மொழிகளைத் தருதல்; மற்றையது "விசும்பு என்பது வெறும் கற்பனை" (91ம்பக்கம்) "ஊனினை உருக்கி உள்ளொளியைப் பெருகச் செய்ய வேண்டும் என்று மாணிக்கவாசகர் சிவபெருமானை வேண்டுகிறார். மாணிக்கவாசகர் பாடியதை விஞ்ஞானிகள் அணுவில் கண்டார்கள்" (பக்கம் 176) என்பவற்றுள் முந்தியது ஆன்ம தத்துவ பௌதிக விசும்பிற்கு வடிவம் முதலியன கூறியிருக்கும் சைவநூன்மரபுக்கு முரண்பாடானதாகலானும், பிந்தியது மாணிக்கவாசக சுவாமிகள் தந்தருளிய தத்துவாதீதமான அகஅறிவானந்த நிகழ்ச்சியை இன்றைய விஞ்ஞானிகள் கண்ட தூல பௌதிகக் காட்சியெனக் கொள்ளுதல் உண்மைச் சைவநூலறிவு அனுபவங்களுக்கு எதிர் மறையாகலானும், அவற்றை எதிர்காலத்திலே அகற்றுதல்.

ஈண்டைக்கு இவற்றை இவ்வாறு கண்டு, இவ் வரிய வெளியீட்டைத் தமிழுலகம் வரவேற்று இன்புறுமென்று நம்புகிறோம்.

ஆசிரியர்: R.K. விசுவநாதன் M.A

பௌதிகத் துணைப்பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

விலை ரூபா: 3/=

பெறும் விலாசம்:
R. K. VISWANATHAN M. A.
*Associate Prof. of Physics*
Annamalai University
Annamalainagar, S. I.

ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்
அருளிச் செய்த

## நித்திய ஒழுக்கம்

ஆன்மாக்கள் எண்ணிறந்தன. ஆன்மநாயகர் ஒருவரே. பல திறப்படும் அறிவு நிலைகளை யுடைய ஆன்மாக்களுக்கு ஆன்மநாயகர் அருளும் முறைகளும் பல திறப்படும். அவற்றுள் "ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்த நித்திய ஒழுக்கம்" ஒன்றைக் குறிக்கும். சைவ நூல் மரபுக்குப் பொருந்தாத கூற்றுக்கள் உளவேயெனினும் "இந்த நித்திய ஒழுக்கப் புத்தகத்தில் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் சித்தர்களுடைய வாழ்க்கை முறையை எடுத்துக் காட்டியிருக்கிறார். அதை ஒவ்வொருவரும் கூடியவரை அப்பியாசித்துத் தங்களுடைய அநுபவங்களை எமக்கு எழுதினால் பெரிதும் நன்றி பாராட்டுவோம்" என்று முகவுரையிற் கூறியதற்கியைய, குறித்த சித்தர் வாழ்க்கைமுறையை விழைவோர் இதை விரும்பி வரவேற்பரென நம்புகிறோம்.

பதிப்பாசிரியர்:
திரு. V. இராஜகோபால், *M A.*

பெறுமிடம்:
Writers Press & Publication Ltd
31, Karaneswarar Koil
Saidapet, Madras.

விலை அணா 8.

எமது பார்வைக்கனுப்பிய பிரதிகளை அன்புடனேற்றும்.


## விளம்பரம்

உடுப்பிட்டிக்கிராமச்சங்கம்

ஷ சங்கத்தைச் சேர்ந்த கிராமங்களில் அரசினர் மான்யரோட்டு வேலைகளுக்கு 1952ம் ஆ. மார்கழி ௴ 12 ௳ காலை 9 மணிவரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

கேள்விப்பத்திரப் பிணைப்பணமாக ரூபா ஐம்பது, 1952 ம் ஆ. மார்கழி ௴ 10 ௳ மாலை 1 மணிக்கு முன் இக் கந்தோரில் கட்டியவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் என்னால் வழங்கப்படும்.
மேலும் ரோட்டு வேலைகளின் விபரங்களைச் சங்கக் கந்தோரில் வந்து என்னிடம் அறியலாம்.

வடபகுதி ஸ்தலஸ்தாபன அதிபர் கந்தோரில் பதிந்த நாமாவளிகளுக்கே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இ. நா. சிவகுருநாதன்
ஷ சங்கத் தலைவர்

உடுப்பிட்டி
1—12—1952.

M. 183 2, 5, 9—12—52.

வியாபாரத்திற் கழகு
விளம்பரஞ் செய்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்ட நிவாரணம்

யாழ்ப்பாணக் கச்சேரியில் மந்திரிகள் மாகாண அதிபர் முதலியோர் நடத்திய புயல் நட்ட நிவாரண ஆலோசனைக் கூட்டத்திலே மூன்று லட்சம் ரூபா உடன் உதவிக்கு அரசாங்கம் கொடுக்குமெனத் தீர்மானிக்கப்பெற்றதென அறிய வருகின்றது.

## மெய்த்தவ வேடமே ...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

கலம் பெருக எனக்கு வாழ்வு வந்தது என்னுமாறு தேவரீர் இங்கே எழுந்தருளியதென்னோ என்று வினவினர். உங்கள் முதல்வராகிய சிவபெருமான் அருளிய எங்குமில்லாத ஆகமம் ஒன்றை உமக்குப் போதிக்கும்படி கொண்டுவந்தேன் என்றான் பிறபேறும் எனக்குண்டோ அருளிச் செய்ய என்றார் நாயனார். தேவியாரையின்றி நாமிருவருந் தனியே யிருக்கவேண்டுமென்று அவன் சொல்லத் தேவியாரை அந்தப்புரத்துக்கனுப்பி இனி அருளிச் செய்யும் என்றிருந்தார். கையில் வைத்திருந்த வஞ்சக்கவளிகையை மடியில் வைத்துப் புத்தகம் அவிழ்ப்பவன்போல மறைத்துவைத்திருந்த உடைவாளை எடுத்து அவரைக் குத்தினான். அவர் மெய்யடியார் வேடமே மெய்ப்பொருளென்று வணங்கி நின்றார்.

"கைத்தலத் திருந்த வஞ்சக்
 கவளிகை மடிமேல் வைத்துப்,
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
 புரிந்தவர் வணங்கும் போதில்,
பத்திரம் வாங்கித் தான்முன்
 நினைந்தஅப் பரிசே செய்ய,
'மெய்த்தவ வேட மேமெய்ப்
 பொருள்' எனத் தொழுது
 வென்றார்"

தத்தன் கொடிப்பொழுதிலே முத்திநாதனை வெட்டப்போனான் நாயனார் தத்தனைத் தடுத்து ஒருவரும் இடையூறு செய்யாதபடி அவரைக் கொண்டுபோய் நகர்ப்புறத்திலே விடும்படி சொன்னார். அவ்வாறு கொண்டுபோகும் வழியில் முத்திநாதனைக் கொல்லப் பலர் முயன்றபொழுது இடையூறின்றி இவரைக் கொண்டுபோய் விட வேண்டுமென்பது அரசன் ஆணையென்று சொல்லி நகரைக் கடந்து காட்டு வழியிலே அவனை விட்டுத் திரும்பி வந்து இடையூறின்றி முத்திநாதனைக் கொண்டுபோய் விட்ட செய்தியைச் சொல்ல அரசன் தத்தன் செயலைமெச்சி இராச்சிய பரிபாலனத்துக்கு உரியோருக்கும் அன்பால் நெஞ்சழிவோருக்கும் விதிப்படி விபூதிமேல் வைத்த அன்பைப் பாதுகாக்கும்படி போதித்து நடராசப் பெருமானுடைய திருவடிகளை நினைத்தார். அப்பொழுது நடராசப்பெருமான் அவர்முன் தோன்றியருளித் தேவர்களுக்கெட்டாத தம்முடைய திருவடி நீழலையடையுமாறு திருவருள் புரிந்தார்.

"அரசியல் ஆயத் தார்க்கும்
 அழிவுறும் காத லார்க்கும்
விரவிய செய்கை தன்னை
 விளம்புவார் 'விதியினாலே
பாவிய திருநீற் றன்பு
 பாதுகாத் துய்ப்பீர்' என்று
புரவலர் மன்று ளாடும்
 பூங்கழல் சிந்தை செய்தார்"

"தொண்டனார்க்(கு) இமயப்பாவை
 துணைவனார் அவர்முன் தம்மைக்,
கண்டவா றெதிரே நின்று
 காட்சிதந் தருளி மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா
 அருட்கழல் நீழல் சேரக்,
கொண்டவா றிடைய றாமல்
 கும்பிடுங் கொள்கை ஈந்தார்"


## பிரகடனம்:

திருவாதவூரடிகள்புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00,

பிரதோஷவிரதமான்மியம் (புதியபதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு இதனை அநுட்டிக்கவேண்டிய முறை, புத்திபூர்வமாகவும் அபுத்திபூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40.

வில்லிபாரதம் - புட்பயாத்திரைச்சருக்கம்: பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள்விளக்கவிரிவுரை, நூலாசிரியர்வரலாறுமுதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ்ஆங்கில S.S.C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம்பதிப்பு) விலை ரூ.1-25ச.

அரிச்சந்திரபுராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக்குறிப்பு, நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தரவகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்: மேற்படி பண்டிதர்எழுதியது; கொழும்பு விவேகாநந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக்கதை I. (கோபாலநேசரத்தினம்) ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத்தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச

ஈழமண்டலசதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது இலங்கையின் மான்மியத்தை எடுத்துவிளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ. 1·00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம்(B.A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45.

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணா 10)

புலியூர் (யமக)அந்தாதி மாதகல் மயில்வாகனப்புலவர்இயற்றியது ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைசெய்த உரையுடன் விலை சதம் 50.

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply: to PANDIT V. T, SAMBANDHAN Vannarponnai, Jaffna



உ

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

## வெளியிட்ட நூல்கள்

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| கந்தபுராணம் (செய்யுள்) | ... | 8 | — |
| கந்தபுராணம் வசனம் | ... | 5 | — |
| திருவிளையாடற் புராணம் செய்யுள் | ... | 3 | 50 |
| திருவிளையாடற் புராணம் வசனம் | ... | 2 | — |
| பாரதம் ஆதி பருவம் உரை | ... | 3 | 50 |
| சேது புராணம் | ... | 3 | — |
| இராமாயணம்—பாலகாண்டம் (குறிப்புரை) | | 2 | 50 |
| நன்னூற் காண்டிகையுரை | ... | 3 | 50 |
| ,, விருத்தியுரை | ... | 3 | 50 |
| இருட்பா | ... | 1 | 75 |
| சைவசமய நெறியுரை | ... | 1 | 25 |
| பெரியபுராண வசனம் | ... | 2 | 50 |
| பெரியபுராணம் செய்யுள் | ... | 5 | — |
| நாவலர் சரித்திரம் | ... | 1 | 25 |
| இலக்கணச் சுருக்கம் | ... | 1 | — |
| சைவ வினாவிடை (1) | ... | | 20 |
| சைவ வினாவிடை (2) | ... | | 65 |
| முதலாம் பாலபாடம் | ... | | 20 |
| இரண்டாம் பாலபாடம் | ... | | 35 |
| மூன்றாம் பாலபாடம் | ... | | 65 |
| நான்காம் பாலபாடம் | ... | 1 | 75 |
| சிவாலய தரிசன விதி | ... | | 20 |
| அபிராமியந்தாதி யுரை | ... | | 25 |
| திருக்குறள் உரை | ... | 5 | — |
| திருக்கோவையார் உரை | ... | 3 | — |
| கொலைமறுத்தலாதி | ... | 1 | 50 |
| திருமுருகாற்றுப்படை | ... | | 25 |
| தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு | ... | 1 | 25 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு | ... | | 25 |
| நித்தியகரும விதி | ... | | 15 |
| பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு | | | 15 |
| கந்தரலங்காரம், கந்தரனுபூதி | ... | | 15 |
| மதுரை அறுபத்துநான்கு திருவிளையாடற் போற்றிக் கலி வெண்பா | ... | | 05 |
| விநாயக ரகவல் | ... | | 10 |
| சரஸ்வதி யந்தாதி | ... | | 05 |
| துண்டிவிநாயகர் திருவருட்பா | ... | | 05 |
| விநாயககவசம்,சிவகவசம்,சக்திகவசம்,சரசுவதிதோத்திரம் இலக்குமி தோத்திரம் | | | 10 |

இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். மனேஜர், சைவப்பிரகாசயந்திரசாலை.



திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்

திறமான ஞணிமார்க்ஓடுகள் 13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2



நீங்கள் இளமைப் பருவத்தையடைய ○●○

சி. எம். சாமி

### தங்க பஸ்பம்

உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.

இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும். நீரழிவு, பவுத்திரம், மூலம், குன்மம், இடுப்புவலி, வாய்வு, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

### குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I (தென்னிந்தியா)

M. 16, 25-4-52—25-10-52.



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறாப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday December 9, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org